17th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி மரங்கள் 'டிக்லைன்' (Decline) என்னும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

(இ) மாநில வேளாண்மைத்துறை வளர்ச்சிப் பணியாளர்கள் இந்நோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பரிகார ஏற்பாடுகளை உரிய காலத்தில் மேற்கொண்டுள்ளனர். இவ்வியாதியைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சிகிச்சையின் திறனை விளக்குவதற்காக, திருநெல்வேலி மாவட்டம் கடையத்தில் குடியானவர்களுடைய நிலங்களில் காட்சிப் பகுதிகள் (Demonstration Plots) அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த வேளாண்மைக் கிடங்குகளில் அவசியமான ரசாயன மருந்து இருப்புகள் போதிய அளவில் இருக்க வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், எத்தனை ஏக்கர் நிலத்தில் எலுமிச்சை, சாத்துக்குடி சாகுபடி செய்யப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : The total area under lime and sathukudi is roughly 6,000 acres.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எவ்வளவு தான் சிரமப்பட்டு பக்குவமாகச் சாத்துக்குடியை சாகுபடி செய்தாலும், நகரி, சாத்துக்குடியைத்தான் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள். இதைவிட பிற வகை சாத்துக்குடி நன்றாக இருந்தாலும் வாங்குவதில்லை. இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : என்ன காரணம் என்பதை நான் சொல்ல முடியாது. சாதாரணமாக சாத்துக்குடி நல்ல கனமாக இருந்தால் நல்ல சாறு கிடைக்கும். அதற்காக கனமுள்ளதைப் பார்த்து மக்கள் வாங்குவார்கள்.

மாவட்டக் கழக மருத்துவ மனைகள்

* 325 கேள்வி.—திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாவட்டக் கழக மருத்துவ மனைகள் அனைத்தும் அரசாங்க நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டனவா ?

(இ) இல்லையெனில், இன்னும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை எத்தனை ?

(உ) எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும், எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஏனைய மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும் ஒரே வீதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறதா ?

(எ) இல்லையென்றால், அதன் காரணங்கள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) & (எ) அரசாங்கம் எடுத்துக் கொண்ட முன்னாள் தலநிதி மருத்துவ மனைகளின் பணியாளர்கள் அனைவரும் அரசாங்கப் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அரசாங்கச் சம்பள விதங்களில் அவர்களுக்குச் சம்பளமும் வழங்கப்படுகிறது. ஆனால் (1) சிவகெங்கை, அரசாங்கப் பெண்கள்—சிறார்கள் மருத்துவ மனை (2) பள்ளத்தூர், அரசாங்கப் பெண்கள் சிறார் மருத்துவ மனை ஆகிய இரண்டின் பணியாளர்கள் இன்னும் அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இந்த இரு மருத்துவ மனைகளின் பணியாளர்களையும் அரசாங்கப் பணியில் சேர்த்துக் கொள்வது குறித்து அரசாங்கம், மருத்துவத்துறை நெறியாளரைக் கலந்தாலோசித்துப் பரிசீலனை செய்து வருகின்றது.

Research on Indian Medicines

* 326 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have proposed to create any "Research Cell" for Indigenous and Indian Medicine; and

(b) if so, the scope and function and activities of the said Cell?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) A Research Scheme in the three branches of Indian Systems of Medicine namely Ayurveda, Siddha and Unani was undertaken from the Second Five-Year Plan Period (1958) at the Kilpauk Medical College and Hospital, Madras with the assistance of the Government of India. The Scheme was wound up on 1st March 1965. Subsequently, at the instance of the Government of India, fresh Research Schemes have been drawn up and are being finalised in consultation with the Government of India. Pending approval of the Scheme by the Government of India, the Research staff is being continued with their approval.

(b) The following diseases are to be taken up for research and investigation in the three branches at the Kilpauk Medical College and Hospital, Madras :—

Ayurveda

(i) Leucoderma.
(ii) Filariasis.

Siddha

(i) Cirrohsis of the liver in adults.
(ii) Peptic Ulcer.

Unani

Rhemmatoid Arthritis.

The Research Units of Indian Systems of Medicine will have a close and intimate colloboration of the Departments of pharmacology, Bio-chemistry and pathology and other basic sciences of the Kilpauk Medical College. The Units will be guided by Professor of Medicine, Madras Medical College with vast experience in guiding such research schemes.